கொண்டுவந்து சேர்த்து, உயிரைக் காக்கக்கூடிய மனிதநேயப் பண்போடு பணியாற்றும் நல்ல உள்ளங்களுக்கு நற்கருணை வீரன் என்ற நற்சான்றிதழும், 5 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

தடுப்பணை

***6889—திரு. நிவேதா எம். முருகன்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், பொறையார் பகுதியில் ஒழுகைமங்கலம் அருகில் உப்பனாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் நல்ல விவரமாகக் கேள்வி கேட்டிருக்கிறார். பூம்புகார் தொகுதியில் செம்பனார்கோவில் ஒன்றியத்தில் பொறையார் பகுதியில் ஒழுகைமங்கலம் அருகில் உப்பனாற்றின் அருகில் கடல் தண்ணீர் உட்புகாமல் தடுக்க உப்பனாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படுமா என்பது கேள்வி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி ஆற்றின் படுகையில் பாசன அமைப்புகளை விரிவுபடுத்துதல், புனரமைத்தல், நவீனப்படுத்துதல் என்ற திட்டத்தின்கீழ் சிப்பம் 3–ல், சுமார் 93.7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதியிலிருந்து உப்பனாற்றில் கடல்நீர் உட்புகாமல் தடுப்பதற்காக கடைமடை நீரொழுங்கி கட்டும் பணிக்கு ரூ.9.73 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் விரைவில் செயலாக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*

2022 மார்ச் 21]

திரு. நிவேதா எம். முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தரங்கம்பாடி, பொறையார், எருக்கட்டான்சேரி, ஒழுகைமங்கலம் மற்றும் தில்லையாடி கடற்கரைப் பகுதிகளில் உப்பு நீர் உட்புகாமல் இருப்பதற்கு உப்பனாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கிய இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சர் என்று எல்லோராலும் பாராட்டப்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர் மாண்புமிகு நீர் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே தஞ்சை மாவட்டத்தில் உப்பனாற்றின் கழிமுகப் பகுதியில் கடல் நீர் உள்ளே புகுகிறது. 17 கிலோ மீட்டர் நீளத்திற்கு கடல் நீர் உள்ளே வந்துவிட்டது. அதனால் விவசாயம் பாழ்பட்டுவிட்டது. குடிநீர் கிடைக்கவில்லை. மக்கள் அவதிப்படுகிறார்கள் என்பதற்காக அரசு ஒரு திட்டத்தைத் தீட்டியது. அதாவது, அந்தப் பகுதியிலே* Extension, Renovation and Modernisation (ERM) *என்று சொல்வார்கள். அந்தத் திட்டத்தின்படி, 3,384 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 36 ஆறுகளுடைய கழிமுகப் பகுதிகளில் இப்படிப்பட்ட* regulator *கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதனடிப்படையிலே எந்தெந்த இடத்தில் தடுப்பணைகள் கட்ட வேண்டுமோ அவையெல்லாம் கட்டித்தரப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*

திரு. நிவேதா எம். முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான பூம்புகார் தொகுதியில் 50 விழுக்காடு கடற்கரையை ஒட்டிய பகுதியாக இருக்கிறது. மேலும், உப்பனாறு, நண்டலாறு ஆகிய ஆறுகள் ஓடுகிற காரணத்தினால் கடலோரப் பகுதிகளிலும் உப்புத் தண்ணீர் ஏறி, மக்கள் குடிப்பதற்கும், புழங்குவதற்கும் கஷ்டமான சூழ்நிலை இருக்கிற காரணத்தினால்,*

நண்டலாற்றிலும் தடுப்பணை கட்டினால் தொகுதியிலுள்ள அனைத்து மக்களுக்கும் உதவியாக இருக்குமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்டலாறாக இருந்தாலும், எந்த ஆறாக இருந்தாலும் கடல் நீர் உள்ளே புகாமல் இருக்க அந்தப் பகுதியிலே* regulator *கட்டப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டத்திலே பாலாறும், செய்யாறும் ஓடுகின்றன. குறிப்பாக, உத்திரமேரூர் தொகுதியில் இரண்டு பக்கமும் பாலாறும், செய்யாறும் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதிலும் சமீபத்தில் பெய்த கன மழையால் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் மிகப் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், அங்கே தடுப்பணைகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியில் சில தடுப்பணைகளைக் கட்டியிருக்கிறோம். அவர் குறிப்பிட்ட சில இடங்களில் வருகிற நிதியாண்டிலும் தடுப்பணை கட்டப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டத்திலேயும், திருவாரூர் மாவட்டத்திலேயும் வளவனாறு, அடப்பாறு, அரிச்சந்திரா ஆறு,*

2022 மார்ச் 21]

வெள்ளையாறு, பாண்டையாறு என ஐந்து ஆறுகள் ஓடுகின்றன. இந்த ஐந்து ஆறுகளில் கிட்டத்தட்ட 650 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதற்கட்டப்பணிகள் நடந்திருக்கின்றன. மாண்புமிகு நீர் வளத் துறை அமைச்சர் அவர்களை ஒருமுறை அதை நேரில் பார்வையிட வாருங்கள் என்று அழைத்தேன். வருவார் என்று எதிர்பார்க்கிறேன். ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியோடும் அரசு நிதியுதவியோடும், நடைபெறுகிற இந்தப் பணியில் இரண்டாவது கட்டப் பணி எப்போது தொடங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வளவனாறு, அடப்பாறு, அரிச்சந்திரா ஆறு, வெள்ளையாறு, பாண்டையாறு என எல்லா ஆறுகளிலும் ஏற்கெனவே தடுப்பணை கட்டியிருக்கிறோம். மீதி இருக்கிற ஆறுகளில் தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது ஏறக்குறைய ரூ.3,000 கோடி நிதியொதுக்கத்தை அரசு அனுமதித்து விட்டது. எனவே, நடப்பாண்டில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைத்தல்

***2788—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, செங்குன்றம் பேரூராட்சியை பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?